சங்கரன் அவன் இயல்புக்கு ஏற்றாற்போல் குறைந்த செலவில் ஆனால் ஏகப்பட்ட பொருட்களை வாங்கி இருந்தான். எல்லோருக்கும் மலைப்பாக இருந்தது. சுடிதார் மெட்டீரியல்கள், அண்ணனுக்கு சட்டைகள், புடவைகள், வாட்டர் ஹீட்டர், கடிகாரம், அம்மாவுக்கு ரேடியோ, மிதியடிகள், டவல்கள், சோப்பு டப்பாக்கள், அயர்ன் பாக்ஸ், பிளாஸ்டிக் பக்கெட், டாய்லெட் கிளீனர் என்று ஏகப்பட்டது வாங்கியிருந்தான். ஆனால் எல்லாம் சேர்த்தே ஐயாயிரம்தான் ஆகியிருந்தது. மிச்சப் பணம் அப்படியே லெதர் பையில் இருந்தது.

அங்கி, "எங்கேயிருந்துடா இவ்வளவு பணம்?" என்றாள் ஆச்சர்யமாக.

"ஏன் என்னால சம்பாதிக்க முடியாதா?" என்றான் தெனாவட்டாக.

"அதுக்கில்லடா.. எப்படின்னு கேட்டேன்"

"ஆண்டனி ஒரு பிஸினஸ் ஆரம்பிச்சிருக்கான்.. நான் ஓர்க்கிங் பார்ட்னர்.. ஹூம்.. இந்தப்பணம் மட்டும் கொஞ்ச முன்னாடி கிடைச்சிருந்தா அப்பாவைக் காப்பாத்தியிருக்கலாம்.."

அம்மா மாலை அணிவித்திருந்த அப்பாவின் ஃபோட்டோ முன்னால் நின்று அழுதாள். சங்கரன் அவள் அருகே சென்று கைகளைப் பற்றிக் கொண்டான். "அழாதம்மா.. நம்பளுக்கு நல்ல காலம் பொறந்துடுத்து.. நான் நெறைய சம்பாதிக்கப் போறேம்மா.. கோடி கோடியாசம்பாதிக்கப்போறேன்... உங்களை நல்லா வெச்சிருப்பேன்.. அழாதம்மா.." என்றான்.

அம்மாவுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. அவள் விரல்கள் நடுங்கின. "சங்கரா நல்ல வழியிலதானேடா சம்பாதிக்கிற?" என்றாள்.

சங்கரன் உள்ளுக்குள் பதறினான். ஆனாலும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் "அம்மா நல்ல பிஸினஸ்மா.. பயப்படாதே" என்றான்.

"நல்லபடியா வாழ்க்கையில முன்னேறணும்டா சங்கரா.. அதான் அப்பாவோட விருப்பம்" என்றவள், அங்கிருந்த சிறிய எவர்சில்வர் கிண்ணத்திலிருந்து விபூதியை எடுத்து அவன் நெற்றியில் இட்டு விட்டாள்.

சல்சா நடன வகுப்பில் இருந்து நிஷா வெளியே வந்தாள். வியர்வையில் நனைந்திருந்தாள். பியான்ஸ் நோவல்ஸின் "ஐயாம் அ சிங்கிள் லேடி" பாடல் அவள் உடலில் துள்ளலாக நிறைந்திருந்தது. 'பாட்டும் நடனமும் வாழ்க்கையை எவ்வளவு சுவாரஸ்யமாக ஆக்குகின்றன' என்று நினைத்துக் கொண்டாள். தன்னுடைய காரில் ஏறினாள். "டிரைவர்! வீட்டுக்குப் போகலாம்" என்று சொல்லிவிட்டு காதில் ஹெட்ஃபோனை மாட்டிக் கொண்டாள். அதில் டெய்லர் ஸ்விஃப்டின் லவ் ஸ்டோரி ஒலிக்க ஆரம்பித்தது. அதில் மெய் மறந்து கண்ணை மூடிக் கொண்டாள்.

கார் பயணித்தது, கடற்கரைச் சாலையில் பயணித்தது எதுவுமே அவளுக்குத் தெரியவில்லை. கண் மூடிப் படுத்திருந்தாள். டெய்லர் ஸ்விஃப்டின் முழு ஆல்பம் முடிந்த பிறகே கண் திறந்தாள். அப்போது அவள் சென்னை மெரீனா கடற்கரையில் இருந்தாள். மாலை மணி மூன்றரை. திடுக்கிட்டு எழுந்தாள். டிரைவரைப் பார்த்தாள். காணோம். தன் அருகில் ஒரு பிரீஃப்கேஸ் இருந்ததை அச்சத்துடன் பார்த்தாள்.

செல்ஃபோன் ஒலித்தது. எடுத்தாள். ஏதோ ஒரு வெளி மாநில நம்பர். "ஹலோ"

"ஹாய் நிஷா. உனக்குச் சேர வேண்டிய கமிஷன் ரெண்டு லட்ச ரூபா உன் பக்கத்துல இருக்கிற பெட்டியில இருக்கு... எடுத்துக்க.. எ டீல் இஸ் எ டீல்.." என்றது குரல்.

நிஷா, "ஹாய்.. மை பாஸ்.. நீதானே? எங்கே இருக்க?" என்றாள் மகிழ்ச்சியாக.

"அது உனக்குத் தேவையில்லாத விஷயம்... டேக் தி மணி அண்ட் ரன்.."

ஃபோன் கட் ஆனது. நிஷா தன் அருகில் இருந்த பெட்டியைத் திறந்து பார்த்தாள். அதனுள்ளே கட்டுக் கட்டாகப் பணம் இருந்தது. அவள் நினைவில் ஆண்டனியின் முகம் ஒரு கணம் மின்னி மறைந்தது.

'இவன் எதற்காக சொன்ன சொல்லைக் காப்பாற்றியிருக்கிறான்?' என்று நினைக்கும் போது அதுவே ஒரு கவர்ச்சியாக இருந்தது. தனக்கு வந்த செல்ஃபோன் நம்பரை முயற்சித்தாள், கிடைக்கவில்லை. 'ஸ்விட்ச் ஆஃப்' என்றே பதில் வந்தது.

அவளுக்கு உடனே ஆண்டனியைப் பார்க்க வேண்டும் என்கிற ஆவல் உண்டானது. அது சாத்தியமில்லை என்பது புரிய, காரைக் கிளப்பினாள். அந்த இரண்டு லட்சத்தை உடனே செலவழிக்க வேண்டும் என்கிற அகோரப் பசி உண்டாகியது. உடைகள், செருப்புகள் மட்டும் இருபத்து ஐயாயிரத்துக்கு வாங்கினாள். நண்பர்களை அழைத்துக் கொண்டு மாயாஜால் சென்றாள். இஷ்டத்துக்குச் செலவு செய்தாள். "ஏது இத்தனை பணம்?" என்று நண்பன் கேட்டதற்கு "உழைச்சி.. சம்பாதிச்சேன்.." என்றாள்.

ஆண்டனி தன்னுடைய லேப்டாப்பில் இண்டர் நெட் இணைப்பில் சாட் செய்து கொண்டிருந்தான். நண்பர்கள் அந்தத் திரையையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். "பார்ட்டி சிக்கிச்சி.." என்றான் ஆண்டனி. சாட்டில் குமரகுருபரன் என்பவன் பேசிக் கொண்டிருந்தான். ஆண்டனி மரியா என்கிற பெண் பெயரில் சாட் செய்து கொண்டிருந்தான்.

"ஹாய் மரியா.. உனக்கு என்ன வயசு?" என்று கேட்டான் குமரகுருபரன்.

"இருபத்தி ஒன்னு...."

"சைஸ்?"

"நேர்ல பார்த்து தெரிஞ்சுக்கோ.."

"உன் ரேட் என்ன?"

"நான் விலைமகள் இல்லை... செக்ஸ் என்பது என் தனிப்பட்ட சந்தோஷத்துக்கானது" என்று டைப் அடித்த ஆண்டனி, கண் சிமிட்டினான். நண்பர்களிடம் சொன்னான். "இவன்தான் நமக்கு அடுத்தபடியா பணம் தரப்போறவன்.."

(தொடரும்)